**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

MC.No. 24 /2024 தேதி 24.03.2026

PW 2 – திரு.சத்தியசீலன் ,40/2026 , த/பெ. ஜெகநாதன்

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன் Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மனுதாரர் எனக்கு என்ன உறவு முறை என்றால் தங்கை முறை ஆகும். மனுதாரர் அவர் பெற்றோருக்கு ஒரே மகள் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் அணைக்காடு கிராமம், மனுதாரர் வாடியக்காடு கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிர் மனுதாரர் அக்காவிற்கு அவரது கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு அவரது குழந்தை எதிர் மனுதாரர் வீட்டில் உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மனுதாரரின் மாமா மகன் என்றால் சரிதான். மனுதாரர் M.SC., M.Phil., படித்துள்ளார் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன் மணமகனை பார்க்க சென்று திருமண நிகழ்ச்சிகளில் பங்குஎடுத்தேன் என்றால் சரிதான். மனுதாரர் குடும்பம் வசதியான குடும்பம் என்றால் கஷ்டப்படும் குடும்பம்தான். எதிர்மனுதாரர் என்ன வேலை செய்கிறார் என்று தெரியுமா என்றால் திருமணத்தின்போது மலேசியாவில் வேலை பார்த்தார். தற்போது சிங்கப்பூரில் வேலை பார்க்கிறார், ஆனால் என்ன வேலை என்று தெரியாது. அவர் என்ன சம்பாதிக்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியாது. திருமணத்தை நான்தான் நடத்தி வைத்தேனா என்றால் இல்லை, அனைவரும் சேர்ந்து நடத்தினோம். திருமணத்தின்போது மனுதாரரின் அப்பா வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். அவர் சட்டவிரோதமாக வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். திருமணத்தில் நானும் என் மனைவியும் தான் கன்னிகாஸ்தானம் செய்தோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு எவ்வளவு நகை, சீர்வரிசை செய்தார்கள் என்று எனக்கு

நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எதிர்மனுதாருக்கு பெண் வீட்டில் 7 பவுன் நகை, இருசக்கர வாகனத்திற்கு ரூ.1,50,000, வீட்டிற்காக ரூ.1,00,000 மற்றும் திருமண பேச்சுவார்த்தையின்போது ரூ.50,000 கொடுத்தார்கள். ரூ.5,00,000 ற்கு சீர்வரிசை செய்தார்கள். மனுதாரருக்கு சுமார் 6 பவுன் நகை போட்டோம். எவ்வளவு நாட்களாக இருவரும் பிரிந்து வாழ்கிறார்கள் என்றால் சுமார் 3 வருடம். இருவருக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். திருமணத்திற்குபின் இருவரும் எங்கு வாழ்ந்தார்கள் என்றால் எதிர்மனுதாரர் வீட்டில். எவ்வளவு நாட்கள் ஒன்றாக இருந்தார்கள் என்றால் சுமார் 1 வருடம்.

இருவரும் ஒன்றாக வாழ்ந்த சமயத்தில் அவர்களுக்குள் எதாவது பிரச்சனை ஏற்பட்டதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இருவருக்கும் இடையில் வேறு வழக்கு எதாவது நடக்கிறதா, அதுபற்றி தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கை மனுதாரர் எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள பிரச்சனைகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். எதிர்மனுதாரர் பெற்றோர்கள் வேலை எதாவது செய்கிறார்களா என்றால் விவசாயம் செய்கிறார்கள். அவர்களின் சொத்து விபரம் தெரியுமா என்றால் 11/2 மா தென்னந்தோப்பு உள்ளது, வேறு எதுவும் தெரியாது. அந்த தென்னந்தோப்பு எதிர்மனுதாரரின் பூர்வீக சொத்து என்றால் இல்லை, வெளிநாட்டில் இருந்தபோது வாங்கினார். அந்த சொத்தின் முழு விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் அவரின் அப்பா, தாத்தா உடன்தான் வசித்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரின் அப்பாவிற்கு ஒரு சகோதரன் மற்றும் ஒரு சகோதரி உள்ளார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வசிக்கும் வீட்டில் பங்கு கேட்டு அவரின் சித்தப்பா வழக்கு தொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் இருதய நோயாளி என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இருவரும் ஏன் பிரிந்தார்கள் என்றால் நகை கேட்டு எதிர்மனுதாரர் பிரச்சனை

செய்ததால் இருவரும் பிரிந்தார்கள். வரதட்சணை தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்தார்கள். அதில் எதிர்மனுதாரரின் குடும்பத்தார்கள் ஜாமின் வாங்கி உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கின் காரணமாக எதிர்மனுதாரர் வெளிநாட்டிற்கு செல்ல முடியாமல் வேலை வாய்ப்பு இல்லாமல் இருந்தார் என்றால் சரிதான். அதன் பின்புதான் அவர் விவாகரத்து வழக்கு தொடுத்தார் என்றால் சரிதான். அதன்பின்பு தான் மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இந்த வழக்கை தவிர மனுதாரர் குடும்ப வன்முறை வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. பிரச்சனை தொடர்பாக காவல் நிலையம் மற்றும் சமூக நலத்துறையில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் நான் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளாரா என்றால் உள்ளார். சேர்ந்து வாழ வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குற்றவழக்கு தொடர்பாக இருவருக்குமிடையில் சமரசம் எதாவது பேசப்பட்டதா என்றால் ஊர்காரர்கள் பேசினார்கள். என்ன பேசப்பட்டது என்றால் மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பப்பட்டார் ஆனால் எதிர்மனுதாரர் ஒத்துக்கொள்ளவில்லை, அதனால் குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது.

**எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.